# PROCEEDINGS

## International Conference
## on
## Contemporary Management (ICCM) - 2014

**"Empowering People Towards Sustainable Development"**

Faculty of Management Studies & Commerce
University of Jaffna, Sri Lanka
14th & 15th, March 2014

**International Conference on Contemporary Management (ICCM) - 2014**

© 2014 Faculty of Management Studies & Commerce
University of Jaffna, Sri Lanka.

Published by : Faculty of Management Studies & Commerce
University of Jaffna, Sri Lanka.

URL : www.jfn.ac.lk / macos / ICCM - 2014

e-mail : iccmuj@gmail.com

T.P : 0094 (0)21 222 3610

Printers : Harikanan Printers,
#681, K.K.S Road, Jaffna, Sri Lanka.

**ISSN:** 2362-0536

**Disclaimer :**

Responsibilities for the content of the full papers included in the publication remain with these respective authors.

# யாழ்ப்பாணத்துப் பண்பாட்டு வளர்ச்சியில் நாட்டுக்கோட்டைச்செட்டிகளின் வகிபாகம் ஒரு வரலாற்று நோக்கு

அ. சாந்தினி


## ஆய்வுச்சுருக்கம்

இலங்கைக்கு மிகவும் அண்மித்தநாடாக இந்தியா காணப்படுவதால் அங்கிருந்து காலத்துக்குக்காலம் பல்வேறு காரணங்களினால் மக்கள்புலப்பெயர்ச்சி, படையெடுப்புக்கள், சமயம், மொழி உள்ளிட்ட பண்பாட்டுச்செல்வாக்குகள் அடிக்கடி ஏற்பட வழியேற்பட்டது. இப்பின்னணியில் இலங்கையில் இந்துசமயமும் அதுசார்ந்தபண்பாடும் முக்கியமானவோர் இடத்தைப் பெற்றிருந்ததைப் பல்வேறு சான்றுகளும் எடுத்துக்காட்டுகின்றன. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் இலங்கையை ஆட்சிசெய்த காலத்தில் இந்துசமயமும் பல்வேறு இடர்களை எதிர்கொண்டது. இருப்பினும் ஒல்லாந்தரின் ஆட்சிக்காலத்தின்பிற்பகுதியில் வழங்கப்பட்ட சமயசுதந்திரம், பிரித்தானியர்கால மிசனரிமாரின் நடவடிக்கைகள் என்பவற்றின் காரணமாக இலங்கையில் இந்துசமயமும் குறிப்பாக யாழ்ப்பாணத்துஇந்துசமயமும் அதுசார்ந்தபண்பாடும் மறுமலர்ச்சியடைந்தன. இம்மறுமலர்ச்சிக்குச் செட்டிவணிகர்களது பங்களிப்பு பெருமளவில் காணப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இந்துசமயமறுமலர்ச்சிக்கு செட்டிவணிகர்களின் பங்களிப்பும் முக்கியகாரணமாக அமைந்தது. அவற்றை ஆராய்வதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். இலங்கையில் செட்டிவணிகர்பற்றிய சாசனக்குறிப்புக்கள் கி.பி.8 ஆம்நூற்றாண்டிலிருந்து காணப்படுகின்றன. 10 ஆம்நூற்றாண்டின் பின்னர் இராணுவப் படையமைப்பை உருவாக்கி, சுயாட்சி கொண்ட நகரங்களையும் உருவாக்கியதுடன் தமது நடவடிக்கைகளுக்கு உட்பட்ட முக்கிய நகரங்களிலும், வர்த்தக மையங்களிலும் வழிபாட்டிற்காக ஆலயங்களையும் அமைத்தனர். ஆயினும் 19ஆம், 20ஆம்நூற்றாண்டுகளில் அவர்கள் யாழ்ப்பாணத்தில் நிரந்தரமாகக்குடியேறி தனித்துவமான சமூகமாக வரையறுத்துக் கொண்டதன் பின்னர் யாழ்ப்பாணத்துப்பண்பாட்டில் அவர்களின்பங்களிப்பு தனித்துநோக்கப்பட்டது. இப்பின்னணியில் எந்தளவுக்கு யாழ்ப்பாணப் பண்பாட்டில் அவர்களது பங்களிப்புக் காணப்பட்டதென்பதை அறிந்து கொள்வது இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். அத்துடன் பல வணிகச்செட்டிப்பிரிவினர் யாழ்ப்பாணத்தில் காணப்பட்டாலும் நாட்டுக்கோட்டைச்செட்டிகளின் பங்களிப்பே இவ்வாய்வில் பிரதானமாக நோக்கப்படுகின்றது.

இக்காலத்தில் யாழ்ப்பாணக்குடாநாடு, தென்னிந்தியா மற்றும் தென்கிழக்காசிய நாடுகளுடன் வணிகத் தொடர்புகளைக் கொண்டிருந்ததால் அவ்வர்த்தகத்தில் முக்கிய பங்கெடுத்த செட்டிவணிகர்கள் செல்வந்தர்களாக மாறினர். இதனால் யாழ்ப்பாணத்தில் நிரந்தரமாகக் குடியிருப்புக்களை ஏற்படுத்தியசெட்டிசமூகம் தமது சூழலில் ஆலயங்களை மட்டுமன்றிக் கிராமங்கள், வீதிகள், மடங்கள், கல்லூரிகள், சமூகசமய நிறுவனங்களையும் ஏற்படுத்திக்கொண்டனர். இவற்றிற்கு நேரடியாகச் சென்று களஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. செட்டிசமூகத்தின் வழிவந்த சிலமுக்கியமான குடும்பங்களுடனும், குறிப்பாகப் பெரியவர்களை நேர்கண்டு சேகரிக்கப்பட்ட தரவுகள் முதலாம்தரவுகளாக அமைகின்றன. இரண்டாம்தரவுகளாக சமகாலத்தில் வெளிவந்த பத்திரிகைகள், மற்றும்நூல்கள், கட்டுரைகள் போன்றனவும் பயன்படுத்தப்பட்டு விபரணஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.


**திறவுச்சொற்கள் :** நாட்டுக்கோட்டைச் செட்டிகள், இந்துசமயம், யாழ்ப்பாணம், வர்த்தகம், பண்பாடு

இலங்கைக்கு மிகவும் அண்மித்த நாடாக இந்தியா காணப்படுவதால் அங்கிருந்து காலத்துக்குக்காலம் பல்வேறு காரணங்களினால் மக்கள்புலப்பெயர்ச்சி, படையெடுப்புக்கள் சமயம், மொழி உள்ளிட்ட பண்பாட்டுச்செல்வாக்குகள் அடிக்கடி ஏற்பட வழியேற்பட்டது. இப்பின்னணியில் இலங்கையில் இந்துசமயமும் அதுசார்ந்த பண்பாடும் முக்கியமானவோர் இடத்தைப் பெற்றிருந்ததைப் பல்வேறுசான்றுகளும் எடுத்துக்காட்டுகின்றன. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் இலங்கையை ஆட்சி செய்த

சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

காலத்தில் இந்துசமயமும் பல்வேறு இடர்களை எதிர்கொண்டது. இருப்பினும் ஒல்லாந்தரின் ஆட்சிக்காலத்தின் பிற்பகுதியில் வழங்கப்பட்ட சமயசுதந்திரம், பிரித்தானியர்கால மிசனரிமாரின் நடவடிக்கைகள் என்பவற்றின் காரணமாக இலங்கையில் இந்துசமயமும் குறிப்பாக யாழ்ப்பாணத்து இந்துசமயமும் அதுசார்ந்தபண்பாடும் மறுமலர்ச்சியடைந்தன. இம்மறுமலர்ச்சிக்குச் செட்டிவணிகர்களது பங்களிப்புப் பெருமளவில் காணப்பட்டது. குறிப்பாக 18ஆம் 19ஆம் நூற்றாண்டுகளில் வர்த்தகத்தில் பிரசித்தி பெற்றிருந்த நாட்டுக்கோட்டைச் செட்டிமாரது பலம்மிக்க பொருளாதாரமும், அவர்கள் சமயத்திலும் தமிழ்மொழியிலும் கொண்டிருந்த ஈடுபாடும், தயாளசிந்தனையும் இத்தகைய பங்களிப்புக்குப் பிரதான காரணங்களாகக் காணப்பட்டன. யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இந்துசமயமறுமலர்ச்சிக்கு செட்டிவணிகர்களின் பங்களிப்பும் முக்கிய காரணமாக அமைந்திருந்தது. இவற்றை ஆராய்வதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். இலங்கையில் செட்டிவணிகர்பற்றிய சாசனக்குறிப்புக்கள் கி.பி.8 ஆம்நூற்றாண்டிலிருந்து காணப்படுகின்றன. 10 ஆம் நூற்றாண்டின் பின்னர் இராணுவப் படையமைப்பை உருவாக்கி, சுயாட்சி கொண்ட நகரங்களை உருவாக்கியதுடன் தமது நடவடிக்கைகளுக்கு உட்பட்ட முக்கிய நகரங்களிலும், வர்த்தக மையங்களிலும் வழிபாட்டிற்காக ஆலயங்களையும் அமைத்தனர். ஆயினும் 19ஆம், 20ஆம்நூற்றாண்டுகளில் அவர்கள் யாழ்ப்பாணத்தில் நிரந்தரமாககுடியேறி தனித்துவமான சமூகமாக வரையறுத்துக் கொண்டதன் பின்னர் யாழ்ப்பாணத்துப் பண்பாட்டில் அவர்களின் பங்களிப்பு தனித்து நோக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் நிரந்தரமாகக் குடியிருப்புக்களை ஏற்படுத்திய செட்டி சமூகம் தமது சூழலில் ஆலயங்களை மட்டுமன்றிக் கிராமங்கள், வீதிகள், மடங்கள், கல்லூரிகள், சமூக சமய நிறுவனங்களையும் ஏற்படுத்திக்கொண்டனர். இதனால் இந்துசமயமும், அதுசார்ந்த பண்பாடும் மேலும் வளர்ச்சியடைந்தது. இப்பின்னணியில் எந்தளவுக்கு யாழ்ப்பாணப் பண்பாட்டில் நாட்டுக்கோட்டைச்செட்டிமார்களது பங்களிப்புக் காணப்பட்டதென்பதை அறிந்து கொள்வது இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். இவர்களால் உருவாக்கப்பட்ட நிறுவனங்களுக்கு நேரடியாகச் சென்று களஆய்வு மேற்கொண்டதுடன், நாட்டுக்கோட்டைச் செட்டி சமூகத்தின் வழிவந்த சிலமுக்கியமான குடும்பங்களுடனும், குறிப்பாகப் பெரியவர்களை நேர்கண்டும் சேகரிக்கப்பட்ட தரவுகள் இவ்வாய்வில் முதலாம்தரவுகளாக அமைகின்றன. இரண்டாம்தரவுகளாக சமகாலத்தில் வெளிவந்த பத்திரிகைள், மற்றும்நூல்கள், கட்டுரைகள் போன்றனவும் பயன்படுத்தப்பட்டு விபரணஆய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

**செட்டிகள்**

செட்டி என்ற பெயர் இந்தியாவின் பல்வேறுபாகங்களிலும் வழங்கிவந்த ஒரு சொல்லாட்சியாகும். வணிகர்களைக் குறிப்பதற்கு இச்சொல் பொதுவாகப் பயன்படுத்தப் பட்டாலும், வணிகரின் பட்டப் பெயராக வரலாற்றுமுறைத் தமிழ்இலக்கியப் பேரகராதி எடுத்துக் காட்டுகின்றது (வரலாற்றுமுறைத் தமிழ்இலக்கியப் பேரகராதி (3ஆம் தொகுதி). செட்டி என்ற சொல் பட்டப் பெயராகவும், தொழிலைச் சுட்டும் பெயராகவும் பயன்படுத்தப்படுகின்றது.[1] நெசவாளர்கள், எண்ணெய் ஆட்டுவோர் போன்றோரும் வணிகத்தொடர்பைக் குறிக்க இச்சொல்லைப் பயன்படுத்தியுள்ளனர். இவ் வாய்வினைப் பொறுத்தவரை 18ஆம், 19ஆம் நூற்றாண்டுகளில் தென்னிந்தியாவிலிருந்துவந்து இலங்கையிற் குடியேறி வணிகம்செய்து தமிழும் இந்துசமயமும் உள்ளடக்கிய பண்பாட்டினை வளர்த்த நாட்டுக்கோட்டைச் செட்டிகளே கவனத்திற் கொள்ளப்படுகின்றனர். இலங்கையிலும் அவர்கள் வட்டிக்கு பணம் கொடுத்ததும், தங்கநகை அடைவு பிடித்தும், பிடவை மற்றும் நெல் முதலிய தானிய விற்பனையிலும் ஈடுபட்டனர். வட்டிக்கு கொடுப்பதும் சில செட்டிமாரால் மேற்கொள்ளப்பட்டது. வேறுதொழில்களையும் சிலசெட்டிமார் மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. முருகக்கடவுளையும் செட்டி என்ற சொல்லால் குறிப்பதுண்டு (தமிழ்நிகண்டு). தாய்நாட்டில் சிவன்கோயில்

களை அமைத்து அவற்றைமையப்படுத்தி வாழ்ந்தாலும், தாம் வர்த்தகம்செய்த இடங்களில் சிவன், முருகன், பிள்ளையார், அம்மன் போன்ற கடவுளர்க்கும் கோயிலமைத்து இந்துப்பண்பாட்டினை வளர்த்த பெருமை அவர்களுக்குரியதாகும்.

**செட்டிகளும் இலங்கை வருகையும்**

செட்டி என்ற பிரிவுக்குள் பல்வேறு வணிகக்குழுக்கள் காணப்பட்டன. பல்லவர் தமிழகத்தில் எழுச்சிபெற்றதைத் தொடர்ந்து வணிககணங்கள் கூட்டாக இணைந்து அயல்நாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டனர். சோழர்காலத்தில் இந்துசமுத்திரத்தை மையமாகக்கொண்டு வணிகநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போது வணிககணங்கள் பேரரசின் பாதுகாப்புடன் இந்துசமுத்திர வர்த்தகத்தில் முதன்மை பெற்றிருந்தன.[2] இக்காலத்தில் இராமநாதபுரத்திலுள்ள தொண்டி, பாசிப்பட்டினம் ஊடாகவே இத்தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டன.[3] சோழராட்சியின்முடிவில் இந்துசமுத்திரத்தில் மேற்கொள்ளப்பட்ட வணிகநடவடிக்கைகள் தளர்ச்சியடைந்தன. ஐரோப்பியராட்சி ஏற்பட்ட காலத்தில் சுதேசவர்த்தக செயற்பாடுகள் பலவீனமடைந்தன. வர்த்தக நடவடிக்கைகள் யாவும் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர்களின் கட்டுபாட்டின் கீழேயே மேற்கொள்ளப்பட்டன. இருப்பினும் ஒல்லாந்தராட்சியின் பிற்பகுதியிலே செட்டிமார்கள்சிறப்பாக நாட்டுக்கோட்டைச் செட்டிமார் ஒரளவுக்கு வணிக நடவடிக்கைகளில் மீண்டும் ஈடுபடமுடிந்தது.

இலங்கையின் அமைவிடமும் அங்கிருந்த வளங்களும் வர்த்தக நடவடிக்கைகளுக்குச் சாதகமான பிரதான காரணங்களாகும். இப்பின்னணியில் பல்வேறு இனத்தவர்கள் இலங்கையுடன் வர்த்தக தொடர்புகளைக் கொண்டிருந்தாலும்(அராபிய) முஸ்லிம்களும் செட்டிமாரும் முக்கியமானவர்கள் எனலாம். ஐரோப்பியரின் வருகைக்குமுன்ரே இவர்கள் இந்துசமுத்திரவர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தனர். ஒல்லாந்தர் இலங்கையில் ஆதிக்கத்தை நிலைநாட்டிய காலத்தில் தனித்துவர்த்தகத்தை நடத்துவதற்குப் பேரிடர்ப்பட்டனர். எனவே இவ்விரு தரப்பினரையும் குறிப்பாகச் செட்டிமாரில் நகரத்தார் எனபட்டப்பட்ட நாட்டுக்கோட்டைச் செட்டிகளைத் தமது வர்த்தக நடவடிக்கைளுக்குச் சாதகமாகப் பயன்படுத்தினர்.

இலங்கையில் பல்வேறு பாகங்களிலும் வெவ்வேறு நிலைகளில் செட்டிகள் எனப்பட்டோர் வசித்து வந்தனர். ஆயினும் 18ஆம் நூற்றாண்டாளவில் நாட்டுக்கோட்டைச்செட்டிமார் அல்லது நகரத்தார் எனப்பட்டவணிகர்கள் தமிழகத்திலிலுள்ள செட்டி நாட்டிலிருந்து வந்து இலங்கை, தென்கிழக்காசிய, தென்னிந்திய வர்த்தகத்தில் ஈடுபட்டனர். முன்னைய காலங்களைப் போல வர்த்தகநோக்கமாக இவர்கள் இலங்கைக்கு ஆரம்பகாலம் தொட்டு வருகைதந்தாலும் 18ஆம் நூற்றாண்டளவில் வர்த்தக நடவடிக்கைகளுக்குப் பெயர் பெற்றவர்களாக நாட்டுக்கோட்டையாரே விளங்கியமை குறிப்பிடத்தக்கது. நாட்டுக்கோட்டைச் செட்டிமாரின் வர்த்தகத்திற்கு ஒல்லாந்தர் அனுமதி வழங்கியதையடுத்து செட்டிநாட்டிலிருந்து வணிகர்கள் இலங்கைக்கு வரத் தொடங்கினர். இவர்களது வருகை பற்றிப் பின்வருமாறு கூறப்படுகின்றது,

"இலங்கை சமீபத்தில் இருந்ததானாலும் தவிரவும் அங்கு பல சௌகரியங்கள் இருந்ததினாலும் முதன்முதலில் ஈழத்திற்குத் தான் செட்டிமார்கள் வியாபாரம் செய்யச் சென்றனர். 1730ஆம் வருக்ஷத்தில் தான் முதன்முதலில் இங்குதொழிலை ஸ்தாபித்தனர்."[4]

ஒல்லாந்தரின் யாழ்ப்பாணத்திற்கான புரட்டஸ்தாந்து மதபோதகரான போல் டயஸின் நூலிலும் இக்காலச்செட்டிமார் பற்றிய குறிப்புக்கள் உள்ளன.

தமிழ்நாட்டில் மட்டுமன்றி இலங்கையிலும், தென்கிழக்காசியாவிலும் பொருளாதார வளத்தினாலும் பண்பாட்டுச் செல்வாக்கினாலும் கடல்வழிப்பயண அனுபவங்களினாலும் முன்னிலை பெற்றிருந்த இவர்களி

னால் தனித்துவமான இந்துப்பண்பாட்டுக் கூறுகள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டன. பர்மா, மலேசியா, சீனா, ஜாவா சுமாத்திரா போன்ற நாடுகளில் தமது பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் இந்துப்பண்பாட்டின் முக்கியமான சில கூறுகளையும் அங்கு அறிமுகம் செய்து வைத்தனர். பர்மாவில் இவர்களது பணியினை விளங்கிக் கொள்ளப் பின்வரும் கூற்றுப் போதுமானதாகும்.

"செட்டியார்கள் இங்கு சென்றபிறகு பர்மியர்களுக்கு வட்டிக்குப்பணம் கொடுத்து நிலங்களை உழுது பயிரிட்டு வழி காட்டி னார்கள். தொடக்கத்தில் அடமானம் ஏதும் இல்லாமல் பணம் கொடுத்துப் பழகியவர்கள். காலமாற்றத்தில் நிலங்களை அடைமானம் வைத்துக்கொண்டு பணம் கொடுத்தார்கள். தரிசாகக்கிடந்த பர்மியபூமி முப்போகம் விளையும் பசுமைதேசமாக மாறியது.... 1923ஆம் ஆண்டிலிலேயே பர்மாவில் 150 ஊர்களில் 1250 வட்டிக் கடைகளில் சுமார் 200 கோடிக்குமேல் செட்டிமார்களின் பணம் சுழன்றது. சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதில் அக்கறைகொண்ட செட்டிமார் கள் பர்மாவில் 59 ஊர்களில் 62 முருகன் கோயிலைக் கட்டினார்கள்.."[5]

மேற்படி கூற்றிலிருந்து அவர்களது பொருளாதார வளத்தினையும், சமய ஈடுபாட்டினையும் நன்கு விளங்கிக் கொள்ள முடியும்.

### இலங்கையில் செட்டிமார் வாழ்ந்த இடங்கள்

கொழும்பு தொடக்கம் யாழ்ப் பாணம்வரை செட்டிசமூகத்தினர் வாழ்ந்துள் ளமைமையை அவர்களது ஆலயங்கள், தெருக்கள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களும் எடுத்துக்காட்டுகின்றன. யாழ்ப்பாணம் கொழும்பு, கண்டி, கம்பளை, மாத்தளை, நாவலப்பிட்டி, பண்டாரவளை, இரத்தினபுரி, மாதம்பை, புத்தளம், குருநாகல், நீர்கொழும்பு, காலி ஆகியஇடங்களில் குடியேறித் தமது பொருளாதார, சமய நடவடிக்கைகளை மேற்கொண்டனர். கொழும்பில் அவர்கள் வாழ்ந்ததெரு செட்டித்தெரு என அமைக் கப்படுவதை இற்றைவரை அவதானிக்கலாம். கொழும்புச் செட்டிகளில் சிலர் கிறிஸ்தவராக மாறியதாக The history of Colombo Chetties of Srilanka vd;w E}ypy; Shirley Pulle Tissra என்பவர் குறிப்பிடுகின்றார்.[6] இருப்பினும் கொழும்பில் வாழ்ந்த சைவச்செட்டிகள் கதிரேசன் கோயில்களையும் பிறகோயில்களையும் அமைத்து அவற்றிக்குப்பல நிவந்தங்களையும் ஏற்படுத்தி இன்றுவரைப் பரிபாலித்து வருவதையும் காணாலாம். கொழும்பில் மட்டுமின்றி இவர்கள் தாம்வாழ்ந்த இடங்கள், சென்றஇடங்கள், வர்த்தகநடவடிக்கைகளில் ஈடுபட்டஇடங்கள் முதலானவற்றிற் கோயில் களை அமைத்தல், நிவந்தங்தங்களை ஏற்படுத்தல், புனருத்தாரனப்பணிகளிற் பங்கேற்றல் போன்ற பல்வேறு செயற்பாடு களில் முன்னின்றுழைத்தனர். கால்நடையாக கதிர்காமயாத்திரை செய்யும் ஆடிவேல் விழாவை ஆரம்பித்து நடத்தியவர்களும் இவர்களே. இவர்களின் இத்தகைய செயற்பாடுகளினால் இலங்கையில் 19,20ஆம் நூற்றாண்டுகளில் இந்துசமயம் மேன்நிலை யில் இருந்ததெனலாம்.

### யாழ்ப்பாணத்தில் செட்டிமார் வாழ்ந்தஇடங்கள்

பண்பாட்டு அடிப்படையில் நோக்கும்போது ஒரு பெயருக்குப்பின்னால் பல்வேறு அடையாளங்கள் இருப்பதோடு பண்பாடு மொழி, வரலாற்று நிகழ்வுகள் என்பவற்றின் வெளிப்பாடாகவும் இடப் பெயர்கள் வழங்கப்பட்டு வருகின்றன. செட்டி என்ற சொல்லை அடிப்படையாகக் கொண்டு பல காணிகளும் ஊர்ப்பெயர்களும் தெருப்பெயர்களும் யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்றன. இணுவில், அளவெட்டி முதலான இடங்களில் செட்டிவளவு, செட்டி தோட்டம் என்ற பெயர்கள் வழக்கத்தில் உள்ளன. யாழ்பாணத்திலும் பருத்தித் துறையிலும் செட்டித் தெருக்கள் காணப் படுகின்றன, யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரை ஒரு சமூகக்குழுமம் வாழ்கின்ற இடத்தை அக்குழுமத்தின் பெயரால் அழைப்பது வழமையாகும். இவ்வகையில் இவர்கள் வாழ்ந்த இடங்கள் செட்டிவீதி என இன்றும் வழங்கிவருவதைக் காணலாம். வலிகாமத்தில் பண்டத்தரிப்புக்கு அண்மையிலும், பூநகரி,

ஆவரங்கால் முதலிய இடங்களிலலும் செட்டிகளுடையகுறிச்சிகள் காணப்படு கின்றன. அல்வாயில் மாலிச்சந்திக்கு அண்மை யில் செட்டிகுடியிருப்பு என்ற இடமுள்ளது. செட்டிகளே பெரும்பான்மையாக வாழ்கின்ற இப்பிரதேசங்களில் அவர்களது தனித்துவ மான பண்பாட்டு நடவடிக்கைகளை தெளி வாக அவதாரிக்கலாம் வேலணையிலும் செட்டிபுலம் என்ற இடம் வழக்கத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. செட்டியார் செல்வநாயகம் முதலியார் என்பவர் சுதுமலை யில் திருமணம் செய்து வாழ்ந்தார். அங்குள்ள அம்மன் கோயிலுக்கு வடக்கே இவரின் பயன்பாட்டில் இருந்த நிலம் செட்டி யார்வளவு எனக் குறிப்பிடப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் வண்ணார்பண்ணையிலும் நாட்டுக்கோட்டைச் செட்டிமார் வாழ்ந்து வருகின்றனர். இதனைவிட அச்சுவேலி, அராலி, அளவெட்டி, கொட்டடி, சரசாலை, நெல்லியடி போன்ற பல இடங்களிலும் இவ்வினத்தவர்கள் வாழ்ந்துவருகின்றனர்.[7] (ஆய்வாளர் மேற்படி இடங்களுக்குச் சென்று இவ்வின மக்களுடன் உரையாடியதன் பின்னணி.)

**பொருளாதார வளம்**

கடல்கடந்து சென்று பொருளை ஈட்டும் தன்மை கொண்ட இவர்கள் பொருள்நிலையை விருத்தி செய்வதையே பிரதான நோக்கமாகக் கொண்டிருந்தனர். குறிப்பாகப் பணத்தப் பெருக்குதல் என்பதே அவர்களது முக்கிய தொழிலாகும். இந்த நோக்கத்தை அடையும்பொருட்டு இவர்கள் பல்வகைப்பட்ட வர்த்தகங்களிலும் கடன்வழங்கும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டனர்.[8] யாழ்பாணத்தில் வட்டிக்குப்பணம் கொடுத்து அக்காலவங்கிளாக இவர்கள் செயற்பட்டனர். இந்நாட்டின் வங்கிஉருவாக்க முன்னோடிகளில் இவர்கள் பிரதானமாகக் கருத்திற் கொள்ளப்பட வேண்டியவர் களாவர்.[9] இலங்கையின் முதலாவது வங்கி யாளர்களும் இவர்களே. இங்கிலாந்தின் வணிகவங்கிகள் இங்கு தோன்றத்தொடங் குவதற்கு முன்னரே செட்டிமார் வங்கிஒன்றின் செயற்பாடுகளை ஒத்தவகையில் செயற் பட்டனர். மேலும் அக்காலத்தில் ஒரு டச்சுநாணயத்தை எவ்வாறு தேடிக்கொள் ளலாம் என்பது பற்றியும் நன்குஅறிந்தி ருந்தனர்.[10]

பிரித்தானியர் ஆட்சியில் குறிப்பாக 1796க்குப்பின்னர் அவ்வாட்சியாளர் வழங்கிய தாராளமயக் கொள்கையால் செட்டிமார் சுகந்திரமாகவும், பரந்தளவிலும் தமது பொருளாதார நடவடிக்கைகளை மேற் கொள்ள முடிந்தது. இந்திய - இலங்கை வர்த்தகத்தினதும் இலங்கையின் உள்நாட்டு வணிகத்தினதும் பெரும்பகுதி இவர்களால் மேற்கொள்ளப்பட சுதேசிகள் முயற்சிக் குறைவுடையவர்களாக விளங்கினர்.[11] இவ்வா றான நிலைமை செட்டிமாரைப் பொருளா தாரரீதியாக மேனிலைக்குக் கொண்டு சென்றது. இதனால் ஆலயங்களை நிறுவுதல் போன்ற இந்துசமயப் பண்பாட்டு நடவடிக் கைகளை மேற்கொள்ளவும், இந்து சமயத்தவரின் பண்பாட்டு நடவடிக்கை களுக்கு பொருளாதார உதவிகளை வழங்கவும் முடிந்ததெனலாம். இக்கால இந்துசமய நிறுவனங்களில் பெரும்பாலும் பொருளாளர் போன்ற பதவிகளையே வகித்தமையை அவதானிக்கலாம்.

**ஆறுமுகநாவலரும் செட்டிகளும்**

19ஆம்நூற்றாண்டின் மத்தியகாலத் தில் இலங்கையில் சைவமறுமலர்ச்சியைத் தலைமையேற்று நடத்தியவர் ஆறுமுக நாவலர். நாவலராலும் அவரது மாணவர் களாலும் சைவமறுமலர்ச்சி முன்னெடுக்கப் பட்டபோது அதற்குப் பெருந்துணை புரிந்தவர்கள் செட்டிமார்களே. நாவலரது மாணாக்கர் பரம்பரையில் இவர்களும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. முதலாவது மாணவபரம்பரையில் ஆறுமுகச்செட்டியார் என்பவரும் ஒருவர். வேன்மயில்வாகனச் செட்டியார் இவரது அடுத்தபரம்பரை மாண வராக இருந்தார். நாவலர் குடும்பத்திற்கும் - செட்டிமாருக்குமிடையே திருமண உறவு களும் காணப்பட்டன. நாவலரின் தமக்கை யாரின் கணவர் சரவணமுத்துச்செட்டியார். ந.ச.பொன்னம்பலப்பிள்ளையின் தந்தை சபாபதி

செட்டியாராவர். இக்காலத்தில் செட்டியார்கள் வேளாளர்களுடன் திருமண உறவினைக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இக்காலத்தில் பசுபதிச்செட்டியார், விநாயகமூர்த்திச்செட்டியார், மந்துவில் வைத்திங்கச்செட்டியார் போன்றோரும் நாவலரோடு நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருந்தனர். நாவலரின் முதற்ப் பிரசங்கம் செட்டிகோயிலாகிய வண்ணைச் சிவன்கோயிலேயே நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து கார்த்திகேயஐயர், பொன்னம் பலப்பிள்ளை போன்ற அறிஞர்களின் பிரசங்ககளமாக வண்ணைச்சிவன்கோயில் விளங்கியது. நாவலரின் தேவதாசிகள் எதிர்ப்புநடவடிக்கை இக்கோயிலுக்கு எதிராக நடைபெற்றபோதும், வணிகப்பெண்ணான கண்ணகியை "செட்டிச்சி"என வர்ணித்த போதும் செட்டிமார்கள் தொடர்ந்தும் நாவலர்பணிகளுக்கும் அவரருக்குப்பின்னரான சைவ தமிழ்ப் பணிகளுக்கும் பல்வேறுவழிகளிற் துணைபுரிந்தனர்.

சைவவிரோதம் என்னும் பிரசுரத்திலே நாட்டுக்கோட்டைச்செட்டிமார் பற்றிக் கூறியுள்ளதைக் கவனித்தால் நாவலர், அவர்கள்பாற்கொண்டிருந்த மதிப்பினையும் செட்டிமாரின் பொதுவான பண்புகளையும் அறியலாம். அக்கூற்றுப் பின்வருமாறு,

"நாட்டுக்கோட்டைச்செட்டிகள் விபூதி ருத்திராஷதாரணம் பஞ்சாஷர செபஞ் சிவதரிசனஞ் செய்கின்றார்கள். சேது முதற் காசிவரையுஞ் சத்திரந்தாபித்து, அன்னதானஞ் செய்கின்றார்கள். பலசிவாலயங்கள் கட்டுவித்துப் பிரதிஷ்டை செய்கிறார்கள். தேவாரம்பெற்ற சிவஸ்தலங்கள் பலவற்றைச் சீர்ணோத்தாரணஞ் செய்து, சம்புரோஷ்ணம் செய்விக்கின்றார்கள். புல மடங்கள் கட்டுவித்துப் அறுபத்துமூவர் குருபூசை முதலியன செய்விக்கின்றார்கள். அவர்களுள்ளே சிலர் சிவபூசை, திருவாசகபூசை செய்கின்றார்கள். சிலர் ஞான நூல்களை ஓதி உணர்ந்து துறவறம் பூணுகின்றார்கள். இப்படிப்பட்ட நாட்டுக்கோட்டை யார்களை கொழும்பில் கதிரேசன்கோயில்போல இங்கும் வண்ணார்பண்ணையிலே சிவன் கோயிலுக்குத் தெற்கே நாட்டுக்கோட்டை யாரால் ஒரு கதிரேசன் கோயில் கட்டுவிக் கப்படுகின்றதே.."[12]

மேற்படி கூற்றிலிருந்து செட்டிமார் இந்துசமயத்தைப் பின்பற்றியதோடு அவர்கள் தமிழகத்திலும் இங்கும் மேற்கொண்ட பணிகளையும் தெளிவாக ஒருவரால் விளங்கிக் கொள்ளமுடியும். அத்துடன் வெகுசன துரோகம் என்றபிரசுரத்திலும் நாவலர் செட்டிமார்சிலரின் பணிகளை எடுத்துக் காட்டுகின்றார்.

நாட்டுக்கோட்டைச்செட்டிமார் மீது பெருமதிப்புக் கொண்டிருந்த போதும் இவர்களை விளித்து "வண்ணார்பண்ணைக் கதிரேசன் கோயில்" என்ற பிரசுரத்தை வெளியிட்டமை கவனிக்கத்தக்கதாகும். இலங்கை நேசனில் 1879ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட இப்பிரசுரத்தில் நாவலர் சில ஆகம முரண்பாடுகள் பற்றி எழுதியுள்ளார். இதன் இறுதிமுடிப்பினை அவர்களது கணக்குப் பார்க்கும் முறையிலேயே கூறுவது கவனத்துக்குரியதாகும்[13]. நல்லூர்கந்தசுவாமி கோயிலின் வேல் வழிபாட்டினையும் பூசை செய்வோரையும் கண்டித்தது போலவே இக்கோயிலின் ஆகமத்திற்கு விரோதமான அம்சங்களைக் கண்டிப்பதை அவதானிக்கலாம். நாவலர் தமிழகத்தில் திருவாவடுதுறை ஆதீனத்திலே நாவலர் பட்டத்தைப்பெற்று நாடு திரும்பும்போது வரவேற்றுபசரித்தவர்கள் செட்டிமார்களே எனக் கூறப்படுகின்றது. மேலும்நாவலரது பணிகளுக்குப் பணம், நிலம் கொடுத்துதவினர். எனவே செட்டிமார் - நாவலரிடையே காணப்பட்ட உறவானது இந்துசமயத்ததை நன்முறையிற் பேணிப் பாதுகாத்தல் என்பதாக இருந்ததெனலாம்.

**ஆலயப்பணிகள்**

இலங்கையின் 19ஆம் நூற்றாண்டின் இந்துப்பண்பாட்டின் மறுமலர்ச்சியிலும், வளர்ச்சியிலும் செட்டிமாரின் பங்கு முக்கியமானதாகும். தமிழ்நாட்டில் சிவன் கோயில்களை அமைத்து சைவாசார

சீலர்களாக விளங்கிய செட்டிமார் தாம் வாழ்ந்த இடங்களிலும் கோயில்களை மையப்படுத்திய வாழ்வியலைப் பின்பற்றி யிருந்தனர். சைவர்களாக விளங்கியமையால் தமது மேலதிக பொருளாதார ஈட்டத்தினை ஆலயங்கள் அமைப்பது, நிவந்தங்கள் செய்வது, சைவஸ்தாபனங்களை நிறுவுவது, கல்விச்சாலைகளை நிறுவுவது போன்ற பணிகளுக்கு வாரிவழங்கினர்.

யாழ்ப்பாணத்தில் செட்டிமாரால் அமைக்கப்பட்ட கோயில்களும் யாழ்ப் பாணத்தின் இந்துப்பண்பாட்டு வளர்ச்சியி லும், ஆன்மீக வாழ்விலும் பெரும் பங் களிப்பை வழங்கியுள்ளன. யாழ்ப்பாணத்தில் வண்ணார்பண்ணைச் சிவன் கோயில், காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள கதிர்வேலாயுதசுவாமி கோயில், கொழும் புத்துறை இலந்தைக்குளம் பிள்ளையார் கோயில், சரசாலை பெரியஇராமாவில், சிறியஇராமாவில் கோயில்கள், நெல்லிய வோடை அம்மன் கோயில் பண்டத்தரிப்பி லுள்ள காலையடிச் சுப்பிரமணிய சுவாமி கோயில் (பேச்சுவழக்கில் இடும்பன் கோயில்), புலோலி பசுபதீஸ்வரர்கோயில் (இக்கோயில் பெண் பிள்ளைகளுக்கே சீதனமாகக் கொடுக்கப்படும்) போன்றபல கோயில்கள் செட்டிமாருக்குரியனவாகும். இவற்றினை யண்டி செட்டி இனத்தவரின் குடியிருப்புக்கள் காணப்படுகின்றன. கி.பி.1790இல் யாழ்ப் பாண நகரத்தில் நிறுவப்பட்ட வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் யாழ்ப்பாண இந்துப் பண்பாட்டு வரலாற்றில் தனித்துவமான தாகும். இக்கோயில் அமைப்பிலும் அழகிலும் தென்னிந்தியாவில் சீர்காழிப்பதியின் பக்கத்திலுள்ள புள்ளிருக்குவேளூர் வைத்தீஸ் வரன்கோயிலை ஒத்துக் காணப்படுவதாகக் குறிப்பிடப்படுகின்றது.[14] அதுமட்டுமன்றி தமிழ்நாட்டுக் கோயில்களை ஒத்தவகையில் ஒருநகரக்கோயில் போன்று இக்கோயில் காணப்படுவதாகவும் எடுத்துக் காட்டப்ப டுகின்றது.[15] "வெகுசனத்துரோகம்" என்ற பிரசுரத்திலே பத்துலட்சருபா ஆஸ்திளுடைய கோயிலாக இதனைக் குறிப்பிடுகின்றார்.[16] எனவே யாழ்ப்பாணத்தில் அமைந்திருந்த கோயில்களுள் வண்ணைச் சிவன் கோயில் தனித்துவமானது என்பதையும் பல்வேறு சிறப்புக்களைக் கொண்டதென்பதையும் நாம் மனங் கொள்ளவேண்டும். இக்கோயிலின் பரிவாரக் கோயில்களாக முத்துமாரியம்மன் கோயில், வேம்படிப் பிள்ளையார்கோயில், கற்கட்டு வைரவர் கோயில், காளிகோயில், ஐயனார்கோயில் போன்றன காணப்படு கின்றன.

திருக்கேதீஸ்வரம் இலங்கைவாழ் இந்துக்களின் பிரதானவழிபாட்டு மையமாக நீண்டகாலம் இருந்துவந்த பெருமையுடைய தாகும். அத்துடன் இக்கோயில் பாடல்பெற்ற தலமாகவும் விளங்கியது. இடைக்காலத்தில் ஏற்பட்ட ஐரோப்பியர்ஆட்சியில் மேற் கொள்ளப்பட்ட சுதேசவழிபாட்டு மையங் களை அழிக்கும் கொள்கையால் நாட்டில் இந்துசமயக்கோயில்கள் பலவும் அழிக்கப் பட்டன. இவற்றில் ஒன்றான திருகேதீஸ் வரத்தை மீளக்கண்டுபிடித்து, இந்துக்களின் முக்கியமான மையமாக மாற்றுவதற்கு விளைந்த நாவலரின் கூற்றைக் கீழேகாணலாம். "இத்திருக்கேதீஸ்வரம் அழிந்து காடாகிக் கிடக்கின்றதே! புதிதுபுதிதாக இவ் விலங்கை யில் எத்தனையோ கோவில்கள் கட்டப் பெறுகின்றனவே! நீங்கள் இந்த ஸ்தலத்தைச் சிறிதும் நினைக்காத தென்னையோ! இவ் விலங்கையிலுள்ள வீபூதிதாரிகள் எல்லாரும் சிறிதுசிறிது உபகரிக்கினும் எத்துணைப் பெருந்தொகைப் பொருள்சேர்ந்துவிடும்.!"[17]

நாவலரின் மேற்படி பிரசுரத்தில் அவரது இயலாமையையும், அவாவையும் ஒருங்கே காணமுடிகின்றது. இந்நிலையில் நாவலரின் திருக்கேதீஸ்வர மீள்நிர்மாணக் கனவை நனவாக்கியவர்கள் செட்டிகளே. இக்கோயில்நிலம் அரசினரால் ஏலம்விடப் பட்டபோது கத்தோலிக்கர் கூடஅதனை வாங்கமுற்பட்டனர். சைவர்கள்சிலர் இந்நிலத்தை வாங்குவதற்குப் பொருளுபகரித் தாலும் செட்டிமார்களும் மிகுதிப்பணத்தை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. இதனா லேயே சைவர்கள் சார்பாக பழனியப்பச் செட்டியாரை அந்நிலத்தை வாங்கும்படி நியமித்தனர். இந்நிகழ்வானது இந்துசமய

வரலாற்றில் முக்கியமானதாக சமகாலத்தில் வெளிவந்த இந்துசாதனப்பத்திரிகை எடுத்துக்காட்டுகின்றது.[18] பசுபதிச்செட்டியார் பழையகோயில் இருந்த இடத்தைக் கண்டுபிடித்து, வேண்டிய தொழிலாளரை அழைத்துச்சென்று, பெரும்பணம் செலவிட்டு 1894அளவில் அங்கு ஒருசிறுகோயிலை அமைத்தார்.[19] 1903இல் மேலும் இக்கோயில் விஸ்தரிக்கப்பட்டது. இதன் நிர்வாகத்தை முதலில் யாழ்ப்பாண செட்டிகளும், பின்னர் கொழும்புக் கதிரேசன்கோயில் நிர்வாகமும் மேற்கொண்டது.[20] பசுபதிச்செட்டியாரின் மகனாகிய சிதம்பரம்செட்டியார் 1953இல் அக்கோயிலின் கும்பாபிடேகத்தை நடத்து வித்தமையும் கவனத்திற் கொள்ளத்தக்கது.

நயினாதீவு நாகபூசணியம்மன் கோயிலோடும் செட்டிமார் தொடர்புபடுத் தப்படுகின்றனர். நல்லூர் கந்தசுவாமிகோயில் மஞ்சத்திருவிழா செட்டிமார்களினால் தொடக்கப்பட்டு, அவர்களது பராம்பரையினரே அத்திருவிழாவை இன்றும் செய்து வருகின்றனர்.[21] இவ்வாறு பலகோயில்களின் எழுச்சிக்கும், அவற்றின் ஆன்மீகப்பணிக்கும் நாட்டுக்கோட்டைச் செட்டிமார் வழிவகுத் தமையை அவதானிக்கலாம்.

### நிலக்கொடை

19ஆம் நூற்றாண்டின் இந்துசமயமறுமலர்ச்சியின் தந்தையாகக் கருதப்படும் நாவலர் பல்ஆளுமை கொண்டவராக விளங்கியதை அவரது பணிகளூடாகக் கண்டுகொள்ள முடிகின்றது. அவரது பல்வேறுபட்ட வெளியீடுகளையும், அவரது வரலாற்றையும் நோக்கும்போது சைவத்தையும் தமிழையும் பாதுகாக்கின்ற அவருடைய முயற்சிகளுக்கு பொருளாதாரஇடர்பாடு தடையாக இருந்ததைத் தெளிவாக அறிந்து கொள்ளமுடிகின்றது. இவ் விடர்பாட்டினை பெரும்பாலன சமயங்களில் செட்டிமாரே ஏதோவொருவகையில் நிவர்த்தி செய்துள்ளதை அவதானிக்கலாம். வடபகுதி இந்துக்கள் இந்துசமயத்தைப் பேணுவதற்கும், நிலைநிறுத்துவதற்கும் பல்வேறு பணிகளை முன்னெடுத்த காலத்தில் அவற்றினை நடைமுறைப்படுத்துவதற்குரிய நிலங்களைக் கொள்வனவு செய்வதற்கு போதிய நிதி வசதியினைக் கொண்டிருக்கவில்லை. அக்காலகட்டத்தில் செட்டிமார் பலர் யாழ்ப்பாணத்தின் இந்துசமயம், தமிழ்மொழி முதலியவற்றை நிலைநிறுத்தும் நிறுவனங்களை நிறுவுவுதற்குச் தமதுநிலங்களை தற்காலிகமாகவோ அன்றி நிரந்தரமாகவோ வழங்கி, இந்துமறுமலர்ச்சியாளரின் பணிகளுக்குத் தோள்கொடுத்தனர். வண்ணை வைத்தீஸ்வரன் கோயில்வீதியிலும் தமது வீடுகளிலும் இந்துசமயப் பணிகளுக்கு இடங்களை வழங்கியிருந்தனர். நாவலரின் சைவப் பிரகாசவித்தியாசாலைக்கு நிலம்வழங்கியவர் ஆறுமுகச்செட்டியார் ஆவர்.[22] நல்லூரக் கந்தசுவாமிகோயில் நிலம் அம்பலவாணர் கந்தப்பசெட்டி பெயரில் தோம்பு பதியப் பட்டிருக்கின்றது.[23] என்பதும் கவனத்திற் கொள்ளத்தக்கதாகும்.

### பாடசாலை அமைத்தல்

கிறிஸ்தவர்கள் பாடசாலைகள் மூலமாக சமயமாற்றத்தை ஏற்படுத்தியதைத் தொடர்ந்து இந்துக்களிடையேயும் பாடசாலைகளை நிர்மாணித்துச் சைவக்கல்வியைக் கற்பிற்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. நாவலருக்கு முன்னரே இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சமஸ்கிருதப் பாடசாலை அமைக்கும் முயற்சிகள் (1806, 1811) தோல்வியடைந்ததைத் தொடர்ந்து 1842இல் மீண்டும் இவ்வாறான ஒரு முயற்சியை முன்னெடுப்பதற்காக சைவர்கள் வண்ணைச்சிவன் கோயிலிற் கூடினார்கள். இதில் வைத்திலிங்கச்செட்டியும் முத்துவேலுச் செட்டியும் உள்ளடங்கியிருந்தனர்.[24]

சிதம்பரத்தில் நாவலரால் நிறுவப் பட்ட பாடசாலையில் தலைமை உபாத்தியாராகவும் பரீட்சகராகவும் செட்டிமாரிற் சிலர் கடமை ஆற்றியிருந்தனர். 6வது வகுப்புக்கு நடைபெற்ற பரீட்சை, பரீட்சகர்கள் பற்றிய செய்திகளையும், தமிழகத்தில் நாவலர் தருமங்களுக்குப் பொறுப்பாக இருந்த சதாசிவப்பிள்ளையின் பணிகளையும் பற்றிய தகவல்களை இந்துசாதனம் வெளியிட்ட

தோடு அவற்றைத் தலைமையாசியரான தி.க.அருணாசலச்செட்டியார் எழுதியனுப்பி இருந்தார் எனவும் குறிப்பிடுகின்றது.[25] சைவபரிபாலனசபையார், நாகலிங்கம் நிறுவிய பட்டிணப்பாடசாலையை ஏற்பதற்கு பசுபதிச்செட்டியார், சைவபரிபாலனசபைக் கூட்டத்தில் தீர்மானம் ஒன்றைக்கொண்டு வந்ததைத் தொடர்ந்து இந்துக்கல்லூரியின் தோற்றம் நிகழ்ந்ததாகக் கூறுவது கவனத்திற் கொள்ளத்தக்கதாகும்.[26] அக்கல்லூரியின் கட்டிடத் திறப்புவிழாவுக்கு கொழும்பு நாட்டுக்கோட்டை நகரத்தார்- 2500.00, யாழ்ப்பாண நாட்டுக்கோட்டை நகரத்தார்- 750.00, காலியிலிருந்த நாட்டுக்கோட்டை நகரத்தார்- 250.00, கண்டி நாட்டுக்கோட்டை நகரத்தார்-200.00ரூபாவழங்கியிருந்தனர்.[27] சுழிபுரத்தில் செட்டிமாரின் பள்ளிக்கூடம் (ஆறுமுகவித்தியாசாலை) ஒன்று செட்டி ஒருவரின் நிலத்தில் அமைக்கப்பட்டது. இது நாவலர் காலத்துப்பள்ளிக்கூடம் எனக்கூறப்ப டுகின்றது.

#### தமிழகச் செட்டிகளின் நிதியுதவிகள்

18ஆம்,19ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையே மிகவும் இறுக்கமான தொடர்புகள் காணப்பட்டன.[28] நாவலரும் அவரது மறுமலர்ச்சிப்பணிகளை தொடர்ந்துசெய்தோரும் தமிழகத்தில் பாடசாலை நிறுவுதல் போன்ற பணிகளையும், புராணபடனம், பிரசங்கம், கற்பித்தல், நூல்வெளியீடு, வாதம் செய்தல் போன்றவற்றையும் மேற்கொண்டனர். இவற்றுட் பலவற்றுக்குச் செட்டிமார் பல் வேறுவகைகளில் உதவி புரிந்தனர். சிதம்பரத்தில் அறுபத்துமும்மை நாயன்மாருக்குச் செய்து வந்த நித்தியபூசை தடுக்கப்பட்ட தகவலை வேங்கடாசலச்செட்டியார், இலக்குமணச் செட்டியார் போன்றோர் இந்துசாதனம் பத்திரிகைக்கு வழங்கி யிருந்தனர்.[29] இந்துசமயம் தொடர்பான செய்திகளை யாழ்ப்பாணத்திலுள்ளவர் களுக்கு அறிவிப்பதன்மூலம் சமயத்தின் வளர்ச்சியை அறிந்துகொள்ளவும் தடைகளை அகற்றவும் செட்டிமார்கள் முயன்றன ரெனலாம். அத்துடன் தமிழகத்தில் இருந்த செட்டிகள் பலர் யாழ்ப்பாணத்தவரோடு நெருங்கியதொடர்பு கொண்டிருந்தனர் என்பதையும் அறிந்து கொள்ளலாம். யாழ்ப்பாண அறிஞர்களின் மாணவர்களாவும் சிலசெட்டிகள் இருந்துள்ளனர். ந.ச.பொன் னம்பலப்பிள்ளையின் மாணவராக காரைக் குடி சொக்கலிங்கச்செட்டியார் விளங்கினார். நாவலருக்கும் வள்ளலாருக்கும் நடைபெற்ற அருட்பா - மருட்பா சம்மந்தப்பட்ட வழக் கிற்கு தமிழகத்துச்செட்டிகள் பணம் உபகரித் தமையும் இவ்வுறவுக்கு எடுத்துக்காட்டாகும். தேவகோட்டைச் செட்டியார், சோமசுந்தரச் செட்டியார், அருணாசலச் செட்டியார், சுப்பையாச் செட்டியார், வேங்கடாசலச் செட்டியார், ராம.-பழனியப்பச் செட்டியார், சிதம்பரச செட்டியார், சொக்கலிங்கச் செட்டியார், ப. பழனியப்பச் செட்டியார், இராமநாதச் செட்டியார், ராம-சு. வேங்கடா சலச் செட்டியார், இலக்குமணச் செட்டியார் போன்றோர் நிதி வழங்கியிருந்தனர். சைவத்தை நிலை நாட்டுவதற்காக இவர்கள் மேற்கொண்ட பணி குறித்து வைதிகசைவ பரிபாலினி பத்திரிகையில் கூறப்பட்டுள்ள தாவது,

> “மருட்பா மறுப்பதற்கு ஏதுவாக தொடுக்கப்பட்ட வழக்கில் எம் பக்கம் தோல்வியடைந்தாற் புறச்சமயிகளும் போலிச் சைவர்களும் திருமுறைகளை அவமதிப்பர் எனக் கருதி நம்பக்கம் பெரு வெற்றியடை வதற்காக 310ரூபா சேர்த்து அனுப்பினர்” (தமிழகத்திலுள்ள மகா சிவ புண்ணிய பரிபாலனம கைஸ்லரிய மகௌதாரியப் பிரபுக்களாய் தேவையம்பதிப் கண்ணும் அமராவதிப் புதூர்க்கண்ணும் வசிக்கும் வணிகச்சிவநேயக் கட்சியினர்----[30]

மேற்படி செய்திக் குறிப்பினை அவதானிக்கும்போது சைவசமயத்தின் தூய்மையைக் காக்க முற்பட்ட தன்மையை யும் வணிகர்கள் (செட்டிகள்) சிவநேயச் செல்வர்களாக விளங்கியதையும் காணலாம். அதுமட்டுமல்லாது இதன் மூலம் தமிழக யாழ்ப்பாணத்தொடர்பையும் விளங்கிக் கொள்ளலாம்.

**சைவநிறுவனங்களில் பங்கேற்பு**

நாவலர்காலத்திலும் அதற்குப் பின்னரும் சைவசமயம் - தமிழ்மொழி என்பவற்றின் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட பல்வேறு நிறுவனங்கள் மற்றும் செயற் பாடுகளில் பங்கெடுத்துக் கொண்ட செட்டி யார்களைப் பற்றிய செய்திகளையும் அறிய முடிகின்றது. இதன்வாயிலாக சைவம் தமிழ் என்பவற்றின் இருப்புக்கும் வளர்ச்சிக்கும் பெருந் துணை புரிந்தனர். சைவவித்தியா விருத்திச் சங்க ஸ்தாபகர்களில் ஒருவராகவும், சைவப்பிரகாச அச்சியந்திரசாலை (முகாமை யாளர்), இந்துக்கல்லூரி, இந்துஒகன் (ர்வைெரழுசபயெ)- இந்துசாதனப்பத்தரிகை, திருக்கேதீஸ்வரப் புனரமைப்புஇயக்கம் என்பவற்றினது நிர்வாகிகளில் ஒருவராகவும் பசுபதிச்செட்டியார் செயற்பட்டதோடு, முக்கியமான நடவடிக்கைகளிலும் பங்கெடுத் தார். அவரது புத்திரனாகிய சிதம்பரச் செட்டியாரும் தனது தந்தையைப் போலவே மேற்படி நிறுவனங்களில் அங்கம் வகித்து (சைவபரிபாலனசபையில் 20வருடங்கள் பொருளாளராகக் கடமை)) சைவப் பெருவள் ளலாகத் திகழ்ந்தார். இந்துசமூகத்தின் மூதவையில் (the council of the h;induSociety) முக்கியமான இடத்தினை வகித்ததோடு திருக்கேதீஸ்வரத்தில் மடாலயம் அமைத்துப் பெயர் சூட்டுவதிலும், அக்கோயிலின் பொருட்டு இந்துக்குருமாரை யாழ்ப்பாணத் திலிருந்து அழைத்துவர முன்மொழிந்ததோடு இந்துக்கள் சார்பாக நிதிதிரட்ட நியமிக்கப் பட்டார். பிரசாரக்கூட்டங்களை ஒழுங்கு செய்தல், திருக்கேதீஸ்வரக் கோயிலமைப் புத்திட்டத்தை(Plan) உருவாக்குதல் போன்ற வற்றிலும் இவரது பங்களிப்பு அளப் பெரியது.[31] இவரது ஆளுமை, பொருளாதாரப் பின்னணி, செல்வாக்கு, அனுபவம், குடும்பப் பின்னணி என்பனவற்றின் அடிப்படையில் மேற்கூறியவாறான பங்களிப்பு இந்து சமயத்தின் வளர்ச்சி வரலாற்றில் முக்கியமான தாகும். இவர் சில பதவிகளை ஊதியம் பெறாமலே மேற்கொண்டவர்.[32] என்பதும் கவனத்திற் கொள்ளத்தக்கது.

**மடங்கள்.**

செட்டிமார்கள் மடங்களை அமைத்த வகையாலும் குறிப்பிடத்தக்கனர். அராலியில் செட்டியாமடம் என்ற இடப்பெயரானது மடத்தோடு தொடர்புடையதாகக் காணப்ப டுகின்றது. இம்மடம் வண்ணைச்சிவன் கோயிலை நிறுவிய நாட்டுக்கோட்டைச் செட்டிகளுக்குரியதாகும். கோயிலுக்குரிய காணிகளில் நெல் விளைவிக்கப்பட்டமையும் அதற்கு ஈடாக இந்த மடத்தில் வைத்து மக் களால் நெல்லில் குறிப்பிட்டளவு பெறப்பட்ட தெனவும் குறிப்பிடப்படுகின்றது. சம்புவில் துறையில் செட்டிமாரின் சுடலையும், மடமும் காணப்பட்டது.[33] தமிழகத்தில் சிதம்பரத்தில் புண்ணியநாச்சியார் மடத்தின் தர்மத்தை சைவபரிபாலன சபையாருடைய மேற் பார்வையின் கீழ்க்கொண்டு வந்து, அங்கு ஒருநிலத்தைப் பெற்றது மட்டுமன்றி, மடத்திற்கு அப்பெயரை இட்டவர் சிதம்பரம் செட்டியாராவர்.[34] நாவலர் ஆச்சிரம மண்ட பத்திற்கும் வித்திட்டவரும் இவரே.

**சித்தர்களையும் அறிஞர்களையும் அழைத்துவரல்**

நாட்டுக்கோட்டைச்செட்டிகள் யாழ்ப்பாணத்திற்கும் தமிழகத்திற்கு மிடையே தொடர்பாளராக விளங்கி, யாழ்ப் பாண இந்துசமயவளர்ச்சிக்கு உரமூட்டினர். சித்தர்கள் பல்வேறுபட்ட அறிஞர்கள் போன்றோரை மட்டுமல்லாது கட்டிடசிற்ப விற்பன்னர்களையும் தேவதாசிககள் போன்றவர்களையும் இங்கு அழைத்து வந்தனர். சித்தர்களைப் பொறுத்தவரையில் கடையிற்சுவாமிகளை வண்ணை வைரமுத்துச் செட்டியார் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்ததாகக் கூறப்படுகின்றது.[35] அவருடைய சீடர்களில் ஒருவரே வைரமுத்துச் செட்டி யாராவர். அதுமட்டுமன்றிச் சின்னச்சுவாமி சமாதியுள்ளதும் நாவலர்வீதியிலுள்ள அன்னசத்தரமும் உள்ளகாணியை வழங்கிய வரும் இவரே.[36] தமிழகத்திலிருந்து வந்து ஆவரங்கால் செட்டிகுறிச்சியில் வாசம்செய்த முத்துச்செட்டியரின் சமாதி நெல்லியோடை முத்துமாரியம்மன் கோயிலில் உள்ளது.[37] யாழ்ப்பாணத்து அறிஞர்கள் சிலரை தமிழ கத்துக்குச் செட்டிமார் அமைத்துச்சென்று இந்துசமய மற்றும் தமிழ்ப்பணிகளை ஆற்றவும், அங்கு அவர்கள் புகழ்பெறவும் காரணமாக விளங்கியிருந்தனர். குறிப்பாக

புராணபடனம், சைவப்பிரசங்கம் போன்றவற்றுக்காக ஈழத்து அறிஞர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். சுவாமிநாதபண்டிதர், அம்பலவாணநாவலர் போன்றோர் இவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டவர்களாவர். சுவாமிநாதபண்டிதர் தமிழகத்தில் செட்டிமாரின் பிள்ளைகளுக்கு ஆசிரியராக இருந்தார். இவ்வாறான பணிகள் தமிழக-யாழ்ப்பாணப் பண்பாட்டு உறவினை அக்காலத்தில் வளப்படுத்திவெனக் கூறலாம்.

### செட்டிமார் வளர்த்த கலை

இவர்களுக்கிருந்த பொருளாதார ரீயிலான மேலாண்மையும், கலைநாட்டமும் இந்தியாவிலிருந்து புதிய வாய்ப்புக்களைத் தேடி இங்கு வந்த பல்துறைக்கலைஞர்களுக்குமான போஷகர்களாக இவர்களை விளங்கச்செய்தது. "எவ்வாறு இத்தாலிய மறுமலர்ச்சிக்காலக் கலைக்கு போஷகர்களாக மெடிச்சிகள் (அநனைஉமை) என்ற உள்ளூர் வங்கியாள, வர்த்தக கணத்தினர் திகழ்ந்து, மதம் சார்ந்த கலைக்கும் தொல்சீர்வாதக் கலைக்கும் பொருளாதார பின்புலத்ததை வழங்கினார்களோ அவ்வாறு செட்டிகள் யாழ்ப்பாணத்தில் 18ஆம் 19ஆம் நூற்றாண்டுகளில் திகழ்ந்தார்கள்".[38] வண்ணைச் சிவன்கோயில் மற்றும் கதிரேசன்கோயில் போன்றவற்றின் சல அமைப்புக்களைச் செட்டிநாட்டுடன் சனாதனன் தொடர்புபடுத்தவதைக் காணலாம். செட்டிமார் கோயில்களை நிறுவுவதற்காகவும், வேறு பணிகளை ஆற்றுவதற்காகவும் பல்வேறு தொழில் விற்பன்னர்களை அழைத்துவந்ததன் பின்னணியில் செட்டிநாட்டுக்கலைமரபின் செல்வாக்கை விளங்கிக் கொள்ளமுடியும். வண்ணைச்சிவன் வீதியிலே கலைஞர்கள் குடியமர்த்தப்பட்டிருந்தனர். மேலும் அக்காலத்தில் பிரபலமான கோயில்களில தேவதாசிகள் நடனமாடுவது வழக்கமாகும். வண்ணைச்சிவன்கோயிலில் செட்டிமார்கள் தமிழ்நாட்டிலிருந்து அழைத்து வந்த தேவதாசிகளை அமர்த்தியிருந்தனர். இவர்களில் ஒருத்தியான கனகி என்பவள் மீது புராண இலக்கியமொன்றுள்ளமை கவனத்திற்குரியதாகும். இவள் செட்டிதத்தெருவாகிய தேர்த்தெருவிலே வாழ்ந்த பொதுமகள் எனக் குறிக்கப்படுகின்றது.[39] புலோலி பசுபதீஸ்வரர் கோயில் பணிக்காக பிராமணர்கள், கட்டிட சிற்ப நடன இசைக்கலைஞர்கள் குடியேற்றப்பட்டனர்.[40]

### மொழித்தொடர்பு

நீண்டகாலமாகச் செட்டிமாருக்கும் யாழ்ப்பாணத்துக்கும் தொடர்புகள் காணப்பட்டமையை அவர்கள் பேசும் மொழி சொற்பிரயோகம் என்பவற்றிலிலிருந்தும் அறிந்து கொள்ளலாம். செட்டிநாடும் தமிழும் என்ற நூலை எழுதிய சோமலெ, செட்டிநாட்டில் வழங்கிவரும் சொற்களை வரிசைப்பபடுத்தியுள்ளார். செட்டிகளிடையே காணப்படும் சொற்கள் பல யாழ்ப்பாணததில் புழக்கத்தில் உள்ள சொற்களாக இருப்பதைத் தெளிவாக விளங்கிக் கொள்ளமுடியும் அசதி, அடம் (பிடிவாதம்) அலக்கழிப்பது, இஞ்சே (கணவன் அல்லது மனைவியை விளித்துச் சொல்வது) இந்தா (இதை வாங்கிக் கொள்), உத்தி (யுக்தி), உதிரி (உதிர்ந்தது), ஊத்தை (அழுக்கு), ஊதாரி (வரம்பு மீறி செலவு செய்பவன்), எடுபிடி (பணிவிடை), கடகம், கணக்கு, கழுசறை (கீழ்த்தரமானவன், கழிக்கப்பட்டவன்-யாழ்ப்பாணத்தின் பேச்சு வழக்கில் கழிசறை எனக் குறிப்பிடுவதுண்டு), காடையன் (போக்கிரி), காப்பு போன்ற சொற்களை நோக்கும்போது இலங்கைக்கும் செட்டிநாட்டுக்கும் இருந்த பிணைப்பினை விளங்கிக் கொள்ளலாம். பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை செட்டிநாடும் தமிழும் என்ற கட்டுரையில் இவ்விடயம் பற்றி ஆராய்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### இலக்கியப் பங்களிப்பு

செட்டிகள் இலக்கியரீதியாகவும் யாழ்ப் பாணத்தின் தமிழ்மொழி, இந்து சமயவளர்ச்சிக்குப் பங்களிக்குச் செய்துள்ளனர். அச்சுவேலி வைத்திய நாதச்செட்டியார் நெல்லியவோடைஅம்பாள் மீது பிள்ளைக்கவி பாடியுள்ளார். வண்ணைச் சிவன் கோயில், புலோலி பசுபதீஸ்வரர்கோயில் போன்ற செடடிமார் கோயில்களை மையப்படுத்தி இலக்கியங்கள் சில ஆக்கப்பட்டிருப்பதும் நோக்கத்தக்கது.

**வைத்தியம்**

செட்டிமாரிற் சிலர் வைத்தியத் துறையிலும் அக்காலத்திற் பிரசித்தி பெற்றிருந் தனர். நாவலர் கூட மித்தியாவாத நிரசனம் என்ற பிரசுரத்திலே "வைத்தியம் அறிந்த செட்டியாரே" என விளிக்கின்றார்தைக்.[41] ஆவரங்காலில் தமோதரம்பிள்ளைச் செட்டியார், செல்லத்துரைச் செட்டியார் போன்றோர் வைத்தியம் செய்தனர். ஆவரங்காலில் காணப்பட்ட செட்டியாரின் பழமைவாய்ந்த வீடு மருத்துவம் பெறும் நோயாளிகளுக்கு ஏற்றவகையில் தலைவாசலில் மேடைகளைக் கொண்டிருப்பதை நேரில் அவதானிக்க முடிந்தது.

**நிறைவுரை**

யாழ்ப்பாணத்தின் பண்பாட்டு மரபானது தனித்துவமாக வளர்ந்து வந்தாலும் காலத்துக்குக்காலம் பல்வேறு பண்பாட்டு அம்சங்களையும் உள்வாங்கி காலத்துக்குக் காலம் பொலிவு பெற்று வந்துள்ளதை அதன் வரலாறு புலப்படுத்தும். ஐரோப்பியர் ஆட்சியில் இந்துசமயத்தையும் தமிழ் மொழியையும் அடிப்படையாகக் கொண்ட யாழ்ப்பாணத்தின் பண்பாடு சிதைவுறும் நிலையிலிருந்த போது ஆறுமுகநாவலர் அரும்பாடுபட்டு அதனைக் காக்க விளைந் தார். தமிழ்நாட்டிலிருந்து யாழ்ப்பாணத் துக்கு வர்த்தகத்தின் பொருட்டு வந்து குடி யேறிய செட்டிமார் குறிப்பாக நாட்டுக் கோட்டைச் செட்டிமார் இந்துக்களாகவும் தமிழ் மொழியைப் பேசுபவர்களாகவும் விளங்கியமையால் நாவலரதும் அவரது அபிமானிகளதும் பணிகளுக்கு உறுதுணை யாயினர். சிறப்பாகப் பொருளாதாரரீதியாக மேன்மையுடையவர்களாக விளங்கியமை யாலும் தயாளசிந்தையாலும் இந்துசமயப் பணிகளுக்கு வாரிவழங்கினர். ஆரம்பகாலங் களில் பண்பாட்டுப்பரவலுக்குப் பல்வேறு காரணங்கள் இருந்தாலும் வர்த்தகமே முதன்மையானதாக இருந்ததாக டி.ஜி.ஹோல் குறிப்பிடுவது நாட்டுக்கோட்டைச் செட்டி களின் யாழ்ப்பாண வருகைக்கும் அவர்களது பணிகளுக்கும் பொருத்தமாக அமையுமெனக் கூறலாம். இன்று பெரும்பாலான இடங்களில் இவர்கள் பிறசாதிகளுடனான திருமண உறவின் பின்னணியில் தனித்துவத்தைப் படிப்படியாக இழந்து வருகின்றனர். ஆயினும் இவர்கள் உருவாக்கிய, ஆதரவு வழங்கிய கோயில்கள் உள்ளிட்ட நிறுவனங்கள் இவர் களின் செயலை என்றென்றும் நிலைத்திருக்கச் செய்யுமெனில் மிகையில்லை.

**அடிக்குறிப்புக்கள்**


எட்கர் தர்ஸ்டன்., ரத்தினம், (மொழி பெயர்ப்பு) தென்னிந்தியக் குலங்களும் குடிகளும், (தொகுதி 03) ப.116).

இந்திரபாலா,கா., (1968) "அநுராதபுரத்தி லுள்ள குமாரகணத்துப் பேரூர்க்கல் வெட்டுக்கள்" சிந்தனை, மலர் 2, இதழ்1, பேராதனைப்பல்கலைக்கழகம்.

பத்மநாதன்.சி., "இலங்கைத்தமிழ் வணிக கணங்களும் நகரங்களும்" சிந்தனை, தொகுதி 2, இதழ் 11, கலைப்பீட வெளியீடு, யாழ்ப்பாணப்பல்கலைக் கழகம்.

சோமலே, (1954) செட்டி நாடும் தமிழும், சாந்தி பிரஸ், சென்னை, ப.35)

சேக்ஷத்திரி க்ஷர்மா, அ., (1970) நாட்டுக் கோட்டை நகரத்தார் வரலாறு (2ஆம் பதிப்பு) வானதிபதிப்பகம், சென்னை, ப.173

உதயன் 08.12.2013

file://F:\gha.htm

ஆய்வாளர் மேற்படி இடங்களுக்குச்சென்று இவ்வின மக்களுடன் உரையாடியது

(சுப்பிரமணியம் ஆறுமுகம்., (2007 சித் -ஆனி) "இலங்கையின்வங்கியியல் வரலாற்றில் நாட்டுக்கோட்டைச் செட்டியார் கள்" ஊக்கி, காலாண்டிதழ், யாழ் மாவட்ட இலங்கை வங்கி, விளையாட்டு நலன்புரி, கலைஇலக்கிய மன்றம், ப. 05)

http://en.wikipedia.org/wiki/Chettiar

புக்ஷ்பரட்ணம், ப., (1993) "தொல்லியல் கருவூலங்கள்" யாழ்ப்பாண இராச்சியம், யாழ்ப்பாணப்பல்கலைக்கழக வெளியீடு. ப.161

வேலுப்பிள்ளை. க., (மீள்பதிப்பு 2004) யாழ்ப்பாண வைபவ கௌமுதி, Asian Educational Services ,New Delhi , Chennai, g.318

கைலாசபிள்ளை.த.,(மூன்றாம்பதிப்பு1954) ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு, வித்தியாநுபாலனயந்திர சாலை, சென்னை,ப.20).

மேற்படி,பக்.147-149

நடராஜன்.க.கி., "மகாவித்துவான் மறைந்த சி.கணேசையர் அவர்கள்" கணேசையர் நினைவுமலர் (1960), ஈழகேசரி பொன்னையா நினைவுவெளியீட்டு மலர் ஈழகேசரிப் பொன்னையா நினைவுவெளியீட்டுமலர், சுன்னாகம், திருமகள் அழுத்தகம் ப.05

சனாதனன்.தா., "யாழ்ப்பாணத்தின் மீள்கண்டு பிடிப்பில் வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் பிராம்ப அறிமுகம்". மஹாகும் பாபிஷேக மலர், சுபதினி ரமேஷ் (தொகுப்பாசிரியர்) (2002),வண்ணை ஸ்ரீ வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானம், யாழ்ப்பாணம், ப.53.

கைலாசபிள்ளை.த.,முற்கூறப்பட்ட நூல் (மூன்றாம்பதிப்பு1954),ப.165

மேற்படி,பக்.147-149

இந்துசாதனம்13.12.1894

(வைத்தியநாதன் கந்தையா,(1957), திருக் கேதீஸ்வர வெளியீடுகள்,ப.28

Navaratnam,C.S.,(1964) A short history of hindusium in Ceylon,Srisanmuganantha press, Jaffna,p.132

நேர்காணல். நெல்லியடி ஜெகநாதன் -வயது 76

அருமைநாயகம், க.,(1976) பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஈழத்து சைவமறுமலர்ச்சி ப.75திருக்கேதீஸ்வரம் திருக்குடத்திரு மஞ்சன மலர், திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச்சபை வெளியீடு ப.75

குணராசா,க.(1996) ஈழத்தவர்வரலாறு, பூபாலசிங்கம் பதிப்பகம், கொழும்பு. 130)

அருமைநாயகம், க., முற்கூறப்பட்ட மலர்.ப.75

இந்துசாதனம் 04.03.1896

சிவராமலிங்கம்.க., திருக்கேதீஸ்வரம் தொழ வைத்த செம்மல் சித.மு.பசுபதிச்செட்டியார், திருக்கேதீஸ்வரம் திருக்குடத் திருமஞ்சன மலர், திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச்சபை வெளியீடு (Sivasambu.R.N."The great name in the history of the h;indu Organ" சிவதர்மசீலர் சித.மு.ப.சிதம்பரச்செட்டியார் உருவப் படத் திரைநீக்க சிறப்புமலர்,(1973), சைவபரிபாலனசபை வெளியீடு, யாழ்ப்பாணம்,பக் 21 -22).,

இந்துசாதனம்.30.12.2001

அருளானந்தம். சாந்தினி (2004) ஈழத்து இந்துசமயமறுமலர்ச்சி (1879-1900)- ஒரு வரலாற்று நோக்கு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுதத்துவ மாணிப்பட்டம் (வரலாறு) வழங்கப் படுவதற்காக உயர்பட்டப்படிப்புக்கள் பீடத்தினூடாக சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு,பக்.பக்.280 -331.

இந்துசாதனம் 04.03.1896

வைதிக சைவபரிபாலினி, டிசம்பர்.1904

Sivasambu.R.N."The great name in the history of the h;indu Organ" சிவதர்மசீலர் சித.மு.ப. சிதம்பரச்செட்டியார் உருவப்படத் திரைநீக்க சிறப்புமலர்,(1973), சைவபரிபாலனசபை வெளியீடு, யாழ்ப்பாணம்,பக் 21 -22.

Rasiah.E.R.,My guide Philosopher & Friend, மேற்படி,ப.05

நேர்காணல்-மகேந்திரம் வயது 70

kathiravelu.M.,.'h;e smiled to conquer'.முற்கூறப் பட்ட கட்டுரை ப.311

அம்பிகைபாகன்.ச.,ஈழநாட்டிற் சித்தர் மரபு. திருக்கேதீஸ்வரம் திருக்குடத் திருமஞ்சன மலர், திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச்சபை வெளியீடு, ப.124

மேற்படி,ப.125.

களவாய்வு, நேர்காணல்,சிவசுந்தரம் பராபரன் -வயது 68

சனாதனன்.,தா,.முற்கூறப்பட்ட கட்டுரை ப.53

சுப்பையனார் (1961) (இராமலிங்கம் .மு,(பதிப்பாசிரியர்) கனகிபுராணம், சுகந்திரன் அச்சகம்,ப.20.

கனகசிங்கம் வாலாம்பிகை (1999) , புலோலி பசுபதீஸ்வரர் கோயில் -ஓர் ஆய்வு, சிறப்புக்கலைமாணி பட்டத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு, இந்து நாகரிகத்துறை. பு.06.

கைலாசபிள்ளை,த. முற்கூறப்பட்ட நூல் .ப.142